மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு,
**முன்னிலை : திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2026**
**IN**
**அசல் வழக்கு எண். 147/2024**

*****

திருமலை ... மனுதார்/ வாதி

/எதிர்/

1. சங்கங்களின் மாவட்ட பதிவாளர், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
2. முதன்மை கல்வி அலுவலர், விருதுநகர்.
3. மாவட்ட கல்வி அலுவலர், சிவகாசி
4. தியாகராஜன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இறுதியான விசாரணைக்காக 10.06.2026 வந்தபோது, மனுதார்/ வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. துரைசரவணன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. செல்வம் அவர்களும் முன்னிலையாகி செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** இம்மனுவானது வாக்காளர்களையும், வாக்காளர் இறுதி பட்டியலில் சேர்ப்பதற்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை ஏற்றுக்கொள்ள

வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனுவானது உ.வி.மு.ச. பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.மனுதாரர் மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் தரப்பில், இம்மனுவின் மனுதார்/ வாதி ஆவார். தாவா வழக்கானது தேர்தல் நடத்துவதற்கு சம்மந்மாக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலிருந்து வருகிறது. நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு, தேர்தல் நடத்துவது சம்பந்தமாக கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதில் வாக்காளர் சம்மந்தப்பட்ட பட்டியலை இறுதி செய்வதற்கு கடந்த 25.04.2026 ம் தேதி கூட்டம் நடத்தப்பட்டு, அதில் எடுக்கப்பட்ட முடிவில் தேர்தலில் வாக்களிக்க விருப்பமுள்ள நபர்கள் அதற்குரிய விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து ஆதார் அட்டை நகலினை இணைத்து சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு, அதன்பேரில் 24.05.2026 ம் தேதி மனுதாரர் பகுதியை சேர்ந்த நபர்கள் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாகவும், தபால் மூலமாகவும் நீதிமன்றம் ஆணையரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், கோடை விடுமுறை காரணமாக பல வாக்காளர்கள் வெளியூர் சென்றுவிட்டதாலும், சிகிச்சைக்கு சென்றுவிட்டதாலும், பல வாக்காளர்கள் வெளியூரில் பணிபுரிந்து வருவதாலும், 27.05.2026 ம் தேதி மனுதாரர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலில் வருஷாபிஷேகம் காரணமாக சில வாக்காளர்கள் தெரிவித்ததால் நீதிமன்ற ஆணையரிடம் 24.05.2026 ம் தேதி நீதிமன்ற ஆணையரிடம் கூடுதல் அவகாசம் கோரப்பட்டதற்கு நீதிமன்ற ஆணையர் மறுத்துவிட்டதாகவும், கோவில் திருவிழாவின்போது வாக்காளர்கள் தங்கள் வாக்கு செலுத்த உள்ளதாக தெரிவித்தும் மனுதாரர் தரப்பில் மேற்படி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து இத்துடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதமானது தெய்வாதீனமானது என்றும், எனவே, வாக்காளர்களையும், வாக்காளர் இறுதி பட்டியலில் சேர்ப்பதற்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 4 ம் எதிர்மனுதாரர் /4 ம்பிரதிவாதியின் மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

3.1) இம்மனுவின் 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி ஆவார். கோடை விடுமுறை காரணமாக பல வாக்காளர்கள் வெளியூர் சென்றுவிட்டதாலும், சிகிச்சைக்கு சென்றுவிட்டதாலும், பல வாக்காளர்கள் வெளியூரில் பணிபுரிந்து

வருவதாலும், 27.05.2026ம் தேதி மனுதாரர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலில் வருஷாபிஷேகம் காரணமாக சில வாக்காளர்கள் தெரிவித்ததால் நீதிமன்ற ஆணையரிடம் 24.05.2026ம் தேதி நீதிமன்ற ஆணையரிடம் கூடுதல் அவகாசம் கோரப்பட்டது. இ.ம.எண்.5/2021 ஆணையர் நியமனம் செய்த உத்தரவில் ஆணையருக்கு எட்டு நிபந்தனைகள் அடங்கிய உத்தரவு பிரகாரம் ஆணையர் வாரண்டை நிறைவேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மேற்படி 8 நிபந்தனைகள் அடங்கிய உத்தரவில் மனுதாரர் கோரும் மனு வாக்காளர்களையும், வாக்காளர் இறுதி பட்டியலில் சேர்ப்பதற்கு தகுந்த உத்தரவு இ.ம.எண்.5/2021, நாள் 19.11.2021 உத்தரவில் ஆணையருக்கு இல்லை. நீதிமன்றம் ஆணையருக்கு கட்டளை 26 விதி 12 உ.வி.மு.ச வின் படி Specific Instruction வழுங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை மனுதாரர் / வாதி Review மனு போட வாய்ப்பு உள்ளது. ஆனால் அதுவும் காலதாமதம் ஆகிவிட்டதென்றும், மனுதாரர் / வாதி தனித்த நிலையில் வழக்கு மற்றும் கமிஷினர் நியமன மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிநிதித்துவ ஸ்தானத்திலிருந்து வழக்கு தாக்கல் செய்யவில்ல என்பதால் இம்மனு சட்டப்படி செல்லாது என்றும், எனவே, தாவா மனுவை 4ம் எதிர்மனுதாரர்/ 4ம் பிரதிவாதி பக்க செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>5. தீர்வு முடிவு:–</u>

5.1) மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் புரிகையில், வாக்காளராக பதிவு செய்வதற்கு போதிய கால அவகாசம் கொடுத்திருந்த போதிலும், அதற்கு முந்தைய சூழ்நிலைகளில் சில நபர்கள் விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், அது குறித்து நீதிமன்ற ஆணையரிடம் தெரிவித்தும், நீதிமன்ற ஆணையர் கால அவகாசம் வழங்குவதற்கு மறுத்துவிட்டார் என்றும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் பட்டியல்களை ஏற்று

பரிசீலனை செய்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத பட்சத்தில் மேற்படி நபர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டது என்றும், எனவே, கால அவகாசம் வழங்கி உத்தரவிட வேண்டுமென்று வாதம் புரிந்துள்ளார்.

5.2) கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதத்திற்கு மாறாக, கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதம் புரிகையில், இம்மனுவினை தாக்கல் செய்வதற்கு எவ்வித சட்ட வழிமுறைகளும் இல்லை என்றும், மனுதாரர் அசல் வழக்கை தனி நபர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளாரே தவிர பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யவில்லை என்றும் இந்த மனுவானது தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று இழுத்தடிக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாகவும் இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வாதம் புரிந்துள்ளார்.

5.3) மனு, அபிடவிட் மற்றும் எதிருரை மற்றும் கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது, தகுதியான வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்டு நீதிமன்ற ஆணையர் அவர்களின் கண்காணிப்பில் கடந்த 24.05.2026 அன்று பொது குழு உறுப்பினர்களால் பொது குழு நடத்தப்பட்டு, வாக்காளர்களை தேர்ந்தெடுப்பது சம்பந்தமான பொது குழு கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டு, பொது குழு கூட்டத்தில் முறையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிதற்காக ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டு, முறையாக செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டு, அதன் பின்னரே விண்ணப்ப படிவங்கள் நீதிமன்ற ஆணையரால் பெறப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் அசல் வழக்கினை தனி நபர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், வழக்கில் தரப்பினராக இல்லாத நபர்களுக்காக அவர்களின் பிரதிநிதியாக இம்மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எந்த சட்ட கூறும் இல்லையென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், முறையான கால அவகாசம் வழங்கிய பின்னர் விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்கப்படாமல் விடப்பட்டு

தற்பொழு நீதிமன்றத்தில் கால அவகாசம் கேட்டு தாக்கல் செய்திருக்கும் இந்த மனுவானது சட்டப்படி நிலைநிற்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முறையாக பொது குழு கூட்டப்பட்டு முறையாக தீர்மானம் நிறைவேற்றுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் கால அவகாசம் கேட்டு தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது வழக்கு அல்லது தேர்தல் நடைமுறைகளை கால தாமதப்படுத்த வேண்டுமென்பதற்காக தாக்கல் செய்ததாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், நீதிமன்ற ஆணையர் விரைந்து வாக்காளர் பட்டியல் தயார் செய்து முறையான வழிமுறைகளின் படி செய்தி தாள்களிலும், அறிக்கை பலகைகளிலும் அறிவிப்பு செய்து விரைந்து தேர்தலை நடத்தி முடித்திட இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.10 19:51:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:– இல்லை.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.10 19:52:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

DM cum JM,
Watrap
I.A.No.3/2026
in
O.S.No.147/2024
Draft / Fair Order
Date : 10.06.2026